 சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருநது அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து

[திரு. மு. கண்ணப்பன்] [1974 ஏப்ரல் 15

என்றைக்கு இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு ஏற்று மத்திய அரசு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு முன்வருகிறார்களோ, அன்றைக்குத் தான் தமிழ்நாடு மட்டுமல்ல, மகாத்மா காந்தி அடிகள் சொன்ன கொள்கை யாக இருந்தாலும், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கடந்த நாற்பது ஆண்டுக்காலமாக தமிழ்நாட்டு மக்களின் மறுமலர்ச்சிக்காக மட்டுமல்லாது இந்த நாட்டில் இருக்கிற ஏற்றத்தாழ்வினை ஒழிப்பதற்காகப் பாடுபட்டவர்களோ அந்தக் கொள்கை வெற்றியடைவதற்கு அரசியல் சட்டம் திருத்தப்பட்டு, சாதாரண தாழ்ந்த குடியில் பிறந்த ஒருவராக இருந்தாலும் அல்லது பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி ஜாதி வேற்றுமை இல்லாத வகையில் யார் வேண்டுமானாலும், தகுதி படைத்தவர்கள் யார் வேண்டுமானாலும் கோவிலுக்கு அர்ச்சகர்களாகப் போகலாம் என்ற நிலைமை ஏற்படும்போதுதான் நிச்சய மாக ஜாதி ஏற்றத்தாழ்வுகள் இந்த நாட்டில் இருந்து ஒழிக்கப்பட்ட நாளாகும். ஆக, இந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றமும் இந்தத் தமிழ் நாட்டு மக்கள் அத்தனை பேர்களும் உளப்பூர்வமாக ஏற்கிறார்கள். மத்திய அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நல்ல கருத்துக்களைக் கூறியுள்ள அத்தனை உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி இந்த அளவோடு அமைகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாகி:** திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களின் திருத்தத்தின்மீது நான் பேச விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லாம் பேசியாகிவிட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நம்முடைய மாமன்றம் நிறைவேற்றுகிற இந்த நாள் ஒரு மகிழ்ச்சிகரமான நாள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடியவர்களில் இந்தியாவில் தலைசிறந்தவர்களாக விளங்கியவர்களில் ஒருவரான டாக்டர் அம்பேத்கார் அவர் களின் பிறந்த நாள் நேற்றையதினமாகும். இந்தத் தீர்மானத்தை விவாதித்துக் கொண்டிருக்கிற இந்த நாள் இந்த அவைத் தலைவராகிய தாங்கள்

1974 ஏப்ரல் 15] [டாக்டர் மு. கருணாநிதி]

பிறந்த நாள் என்பதை எண்ணுகிற நேரத்தில் தங்களுக்கு இந்த அவை உறுப்பினர்கள் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவரும் மகிழத்தக்க ஒரு தீர்மானத்தை இந்த அவை உறுப்பினர்கள் மிக விளக்கமாக விவாதித்து அதை நிறைவேற்றுகிற கட்டத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட சில கருத்துக்கள் மீது என்னுடைய கருத்துக்களையும் இணைய வைப்பது சாலப் பொருத்தமுடையது என்றே நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தை, அனைவரும் அர்ச்சகர்களாக ஆகலாம் என்ற சட்டம் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பெற்று சிலர் அந்தச் சட்டத்தை நீதிமன்றத்தினுடைய கூண்டுகளிலே ஏற்றி அது முடக்கபட்டுவிட்ட பிறகு நான் டெல்லிக்குச் சென்றபோது மத்திய அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களைக்கூட சந்தித்து இதைப்பற்றி பேசியிருக்கிறேன்.

ஆகவே இன்றைக்கு நாம் நிறைவேற்ற இருக்கிற இந்தத் தீர்மானம் மத்திய அரசில் நல்ல புரட்சிகரமான எண்ணம் கொண்டவர்களால் வரவேற்கப்படும் என்ற நம்பிக்கை எனக்குத் திடமாக இருக்கிறது. பாராளுமன்றத்தில் நம்முடைய தீர்மானத்தினுடைய நல்ல நோக்கத்தை உணர்ந்து அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான வழிவகைகளைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த விவாதத்தினிடையே பேசிய நம் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சோவியத் ரஷ்யாவில் எப்படி மத உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அதே நேரத்தில் அதை எதிர்த்துப் பேசுகிற உரிமை எந்த அளவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். இங்கும்கூட கடவுள் நம்பிக்கை பற்றி பேசுகிறவர்களும் அல்லது கடவுள் நம்பிக்கை தவறு என்று பேசுகிறவர்களும் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதையும், மதச் சார்பற்ற ஒரு சர்க்காரில் இருக்கிற நிறுவனங்கள், வானொலி போன்ற அமைப்புக்கள் முழுக்க முழுக்க மதப் பிரசாரம் செய்துகொண்டு வருகிறது என்கின்ற மிகப் பொருத்தமான ஒரு குற்றச்சாட்டைக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னார்கள்.

52. சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 எப்ரல் 15

நானும் அவர்கள் இங்கே எழுப்பிய அந்தக் குற்றச்சாட்டை வரிக்கு வரி அப்படியே ஒப்புக்கொள்கிறேன். இதே கருத்தை அவர்கள் கடந்த 5, 6 நாட்களுக்கு முன்பு இந்த மன்றத்திலே கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்போதும் வலியுறுத்தினார்கள். இதனை ஏற்றுச் செயல்படுத்துகின்ற இடத்தில் தமிழக அரசு இல்லாவிட்டாலும் இன்றைக்குச் செயல்படுத்துகின்ற இடத்திலே இருக்கிற மத்திய அரசு வானொலியை இனிமேலாவது நாட்டு மக்களுடைய பல்வேறு பிரச்னைகளை அணுகுகின்ற வகையில் பயன்படுத்துகின்ற முயற்சியிலே ஈடுபடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மதப் பிரச்சாரத்திற்கு அவர்கள் அறவே இடம் தரக் கூடாது என்று கூறவில்லை. இந்து மதத்திற்கு, இஸ்லாம் மதத்திற்கு, கிறிஸ்தவ மதத்திற்கு இப்படி பல்வேறு மதங்களுக்கென்று அவர்கள் நேரத்தை ஒதுக்கீடு செய்து இன்றைக்கு அந்தப் பிரச்சாரத்திற்கு வானொலியைப் பயன்படுத்துகிறார்கள்.

அதைப் போலவே பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கென்றும் வானொலியிலே ஒரு குறிப்பிட்ட நேரத்தை அவர்கள் ஒதுக்கிட வேண்டும், அதற்கு ஆவன செய்கின்ற முயற்சியை மத்திய அரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதையும் இங்கே கே. டி. கே. அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களோடு நான் இணைத்து ஒரு வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல பெரியவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்கள், வாழ்க்கை வரலாறுகள், மறைந்து விட்டவர்களுடைய சிறப்பு இயல்புகள் இவைகளைப் பற்றியெல்லாம் வானொலியிலே எடுத்துச் சொல்லப்படவில்லை என்கின்ற குறைபாட்டினையும் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

பொதுவாக, சீர்திருத்தக் கருத்துக்கள், எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்படக்கூடிய சீர்திருத்தக் கருத்துக்கள், இவைகளையெல்லாம் இன்றைக்கு இந்த நாட்டில் எடுத்துச் சொன்னால், அந்தக் கருத்துக்கள் ஆழப் பதிந்து, வேரூன்றி விடுமேயானால், நாட்டிலே சில மூட நம்பிக்கைகளின் பின்னால் ஒளிந்து கொண்டு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறவர்கள், மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றவர்கள், சில சனாதனிகள், இப்படிப்பட்டவர்கள் இங்கே தங்களுடைய நிலை கீழே போய்விடுமோ என்கின்ற பயத்தின் காரண

மாக, புரட்சிகரமான கருத்துக்களை எடுத்துச் சொல்கின்ற நேரத்தில், அதை அவர்தான் சொல்ல முடியும், மற்றவர்கள் யாரும் சொல்ல முடியாது என்கின்ற திரையைப் போட்டு அதை மூடிவிடுகிறார்கள்.

உத்தமர் காந்தி அடிகள் அனைவரும் சமம் என்று கூறுகிறார்கள் என்றால், அதைக் காந்தி சொல்லலாம். மற்றவர்கள் சொல்ல முடியுமா என்று கூறி, ஆகவே கடவுளின் அவதாரம் என்று எடுத்துக் காட்டி, கடவுளின் அவதாரங்களால்தான் அப்படிப் பேசமுடியும், சாதாரண மக்களால் அப்படி பேச முடியாது என்று தங்களுடைய கருத்துக்களுக்கு ஆக்கம் தருவதற்குப் புரட்சிகரமான கருத்துக்களை மறைத்து விடுகிறார்கள்.

அதைப் போலத்தான் சித்தர்கள் என்கின்ற பெரும் புலவர்கள் தமிழகத்தில் இருந்தார்கள். மிகப் புரட்சிகரமான கருத்துக்கள், சாதி, சமயங்களைச் சாடுகின்ற அளவுக்கும், ஆயிரக்கணக்கான கடவுள்களை நாம் வணங்கத் தேவையில்லையென்கின்ற அளவுக்கும் அந்தக் கருத்துக்கள் எடுத்து சொல்லப்பட்டன. அவைகளை அவர்கள் எல்லாம், சிவ வாக்கியர் என்ன, மற்ற சித்தர்கள் என்ன, அவர்களால் அந்தக் கருத்துக்களைச் சொல்லமுடியும்—மற்றவர்களால் சொல்ல முடியுமா என்று அந்தக் கருத்துக்களுக்கும் அணை போட்டு விட்டார்கள்.

கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் கூடச் சாத்திரங்களைக் கண்டித்தார். சம்பிரதாயங்களைச் சாடினார். சொர்க்கம், நரகம் என்று சொல்லப் படுகின்றவைகளை எல்லாம் ‘ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்’! என்றுகூட அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னார். ஆனால் என்னவாயிற்று? அவர் மறைவுக்குப் பிறகு அந்தப் பாடல்கள் எல்லாம் முன்னுக்குத் தள்ளப்பட்டு, அவர்கள் மறுபக்கத்திலே பாடிய பாடல்கள் எல்லாம் பின்னால் வைக்கப்பட்டு, முதலிலே இதைப் பாடினார் என்று பின்னால் வைக்கப்பட்டு, திருந்திய பிறகு பாடினார் என்று அப்பாடல்கள் முன்னால் வைக்கப்பட்டு, அவருடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் நாட்டிலே மறைத்து விட்டார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார்கள். அவர் வழி வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார்கள். தந்தை பெரியார் அவர்கள் வழியில் வாழ்ந்து மறைந்த ஜீவா, சமதர்ம

பிரச்சாரம் செய்தார். கே. வி. அழகர்சாமி போன்றவர்கள் நடத்திய பிரச்சாரம் பாரதிதாசன் போன்றவர்கள் நடத்திய பிரச்சாரம்—அவர்கள் சொல்கின்றார்கள் என்றால், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா? என்று எடுத்துச் சொல்லப்பட்டக் கொள்கைகளுக்கு, கருத்துக்களுக்கு விமர்சனங்கள் செய்யப்படாமல், எடுத்துச் சொல்லப்பட்ட ஆட்களின்மீது மக்களுக்கு வெறுப்பை உண்டாக்கி, அதன் காரணமாக, நல்ல கருத்துக்கள் நாட்டிலே திரை போடப்பட்டன.

இன்று அந்தத் திரை விலகி, எல்லா கட்சிகளும் ஒத்துக் கொள்ளக்கூடிய ஒரு சமதர்ம நோக்கோடு செயல்படுகின்ற இந்த அரசு இந்த அவையிலே கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களும், அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் வரவேற்றிருப்பது நான் மிகுந்த மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றேன்.

இது நம்முடைய நண்பர் மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போலவும், திரு. கந்தப்பன் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போலவும், அம்மையார் அவர்கள் பேசிய நேரத்திலே குறிப்பிட்டதைப் போலவும் யாரோ சிலரை அர்ச்சகர்களாக ஆக்கிவிட வேண்டும், அதுதான் பெரிய உத்தியோகம், அந்த உத்தியோகத்திற்குச் செல்ல முடியாமல் தாழ்த்தப்பட்ட மக்கள், பின் தங்கிய மக்கள் தவிக்கின்றார்கள். ஆகவே, அவர்களை உச்சாணிக் கொம்பிலே ஏற்றி வைத்திட வேண்டுமென்பதல்ல. உச்சாணிக் கொம்பிலே அவர்களை ஏற்ற விடாமல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தச் சமுதாயத்தைச் செல்லரித்து வருகின்ற மூடப் பழக்க வழக்கங்களின் தலைமீது போடுகின்ற சம்மட்டி அதுதான் என்று இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, அனைவரும் அர்ச்சகர்களாக ஆகலாம் என்று கூறுகிறோம்.

இங்கே நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஒன்றை அழகாகச் சொன்னார்கள். அர்ச்சகர்கள் கடவுள் நம்பிக்கை படைத்தவர்களாக இருக்க வேண்டும் கோயில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

அந்தக் கடவுளைப் பற்றியெல்லாம் நம்பிக்கையில்லாமல், அந்தக் கடவுள் மீது விஸ்வாசம் இல்லாமல், இந்தத் துளசியையும் வில்வத்தையும் எடுத்துக் கொண்டு அர்ச்சனை செய்து கொண்டிருப்பார்களானால், அவர்களுடைய உதடு ஒன்றை உச்சரிக்கும், உள்ளம் ஒன்றை எண்ணிக்கொண்டிருக்கும். ஆகவே, உதட்டிலே ஒன்றையும் உள்ளத்திலே ஒன்றையும் வைத்துக்கொண்டிருப்பதை யாரும் பார்த்துக் கொள்ள மாட்டார்கள். கடவுள் நம்பிக்கை அறங்காவலர் களுக்கும் வேண்டாமா என்று பார்த்தால், நிர்வாகம் வேறு, தோத்திரம் வேறு. தோத்திரம் ஆண்டவனோடு இரண்டறக் கலப்பது என்று இன்றைக்குப் பொருள் கொள்ளப்படுகின்றது.

ஆகவே இந்தத் தோத்திரங்கள் ஆண்டவனிடத்திலே நம்பிக்கை உள்ளவர் களால்தான் செய்யப்படும் என்று இங்கே நம்முடைய மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் அர்ச்சனைப் பயிற்சியில் தேர்ச்சி பெறுகின்றவர்கள், ஓரளவு கல்விப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். அந்தப் பயிற்சிக்குப் பின்னால், அவர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும் என்று கோடிட்டுக் காட்டியதையும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இந்தத் தீர்மானத்தை ஒருமித்த அளவில் நிறைவேற்ற ஆதரவு அளித்தமைக்கு அனைவரையும் பாராட்டி இந்த அளவில் அமைகின்றேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, after the explanations given by the Hon. Minister for Hindu Religious and Charitable Endowments and the Hon. Chief Minister, I do not press my amendment. However, I would like to press one idea. So far as the Archakas are concerned, it is not a profession, it is a service, it is not a department, it is a service. It is just like the Educational Service or the Medical Service not like the Public Works Department.

I would therefore like to have a further assurance from the Government that the men usually selected for the purpose irrespective of caste creed or sect whatever it is, would be men who would keep to certain practices. For example, in certain temples, the Archaka should live away from his family, be a Brahamachari for six months and such things are there. Will the Government